NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu, p3*
**Date:** 22 January 2018

# பண்பாட்டை விதைத்த கொண்டாட்டம்

அஷ்வினி செல்வராஜ்

நாள் தவறாமல் வாசல் தெளித்து கோலம் போடும் தாயாரின் செயலுக்கான காரணத்தை அண்மையில் பொங்கல் கொண்டாட்டத்தின்போது அறிந்துகொண்டார் எட்டு வயது வைஷ்ணவி ராஜேஷ்.

இவரைப் போன்ற தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஏறக்குறைய 30 பேர் தமிழ்க் கலாசாரம் குறித்த சுவாரசியமான தகவல்களைப் பொங்கலுக்கு முதல்நாள் நடைபெற்ற 'பொங்கல் கலாட்டா' நிகழ்ச்சியின் மூலம் தெரிந்துகொண்டனர்.

தேசிய பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரவை அமைப்பு புதிதாக இந்த ஆண்டு தொடங்கியுள்ள சமூக சேவைத் திட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த 13ஆம் தேதி 'பொங்கல் கலாட்டா' நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இதில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் 25 மாணவர்கள் தாமான் ஜூரோங் வட்டாரத்தில் உள்ள ஆறு அடுக்குமாடி வீடுகளுக்குச் சென்று தாங்கள் ஏற்பாடு செய்த பொங்கல் கொண்டாட்டத்திற்குப் பிள்ளைகளை அனுப்பி வைக்கும்படி அழைப்பு விடுத்தனர்.

அதே வட்டாரத்தில் உள்ள ஃபெய் யீ குடும்ப சேவை அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்ப் பேரவையின் 'பொங்கல் கலாட்டா' நிகழ்ச்சியில் பிள்ளைகளுக்காக பல்லாங்குழி, லகோரி போன்ற விளையாட்டுகளும் மண்பானைகளுக்கு வண்ணம் தீட்டுதல், வண்ணப் பொடிகளைக் கொண்டு அட்டைகளில் ரங்கோலி கோலமிடுதல் போன்ற அங்கங்களும் நடத்தப்பட்டன.

"பல்வேறு திட்டங்கள் மூலம் சிங்கப்பூருக்கு சேவையாற்றி வரும் தமிழ்ப் பேரவை, தமிழ்ச் சமூகத்திற்கு உதவிக் கரம் நீட்டுவதற்காகவென்றே சமூக சேவை திட்டத்தைத் தொடங்கியது," என்றார் தமிழ்ப் பேரவையின் துணைத் தலைவரான ரமேஷ் வெங்கட், 23.

பொங்கல் கொண்டாட்டத்தில் இடம்பெற்ற புதிர்ப் போட்டியில் மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் பங்கேற்று பதில் அளித்ததுடன் காலையில் இருந்து நண்பகல் வரை நிகழ்ச்சி முழுவதும் அவர்கள் துடிப்புடன் காணப்பட்டது பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலும் ஊக்கமளித்தது.

பொங்கல் திருநாள் எதற்காகக் கொண்டாடப்படுகிறது, பொங்கலின்போது கடைப்பிடிக்கப்படும் பழக்கவழக்கங்கள் ஆகியவை குறித்த புரிந்துணர்வை இந்திய மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் பிற இன மாணவர்களுக்கும் ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சி அமைந்தது என்றார் திரு ரமேஷ்.

பல்லாங்குழி விளையாட்டை இதுவரை கேள்விப்பட்டிராத தம் மகளுக்கு நிகழ்ச்சியின் மூலம் நல்ல அனுபவம் கிட்டியது என்றார் வைஷ்ணவியின் தாயார் திருமதி பிரியதர்ஷினி ராஜேஷ், 38.

> பொங்கல் திருநாள் எதற்காகக் கொண்டாடப்படுகிறது, கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்கள் எவை என்பன போன்ற புரிந்துணர்வை இந்திய மாணவர்களுக்கு மட்டுமின்றி பிற இன மாணவர்களுக்கும் ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சி அமைந்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி. அடுத்த முறையும் இது போன்ற சுவாரசியமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய விரும்புகிறோம்.
>
> **ரமேஷ் வெங்கட், 23**

"நிகழ்ச்சியில் பெற்ற அனுபவங்களை வீட்டிற்கு வந்தவுடன் என் மகள் என்னிடம் ஆர்வத்துடன் பகிர்ந்துகொண்டார்," என்ற திருமதி பிரியதர்ஷினி, தமிழர்களின் கலாசாரம் தொடர்பான கேள்விகளையும் அவர் கேட்கத் தொடங்கிவிட்டதாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

பொங்கல் குறித்து மகள் எழுப்பிய கேள்விகளுக்கான பதில்களை இணையத்தில் தேடிய அனுபவத்தைப் பகிர்ந்துகொண்ட திருமதி பிரியதர்ஷினி, தாமும் பல தகவல்களை அறிந்துகொள்ள அந்நிகழ்ச்சி வழிவகுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்திய மரபுடைமை நிலையத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட 'பொங்கல் கலாட்டா', தமிழ்ப் பேரவை தொடங்கிய சமூக சேவைத் திட்டத்தின் முதல் நிகழ்ச்சியாகும். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்களுக்கு பென்சில், அழிப்பான் போன்ற எழுதுபொருட்கள் அடங்கிய அன்பளிப்புப் பைகள் வழங்கப்பட்டன.

அத்துடன், அந்தப் பிள்ளைகள் அனைவரும் 'கறி வில்லேஜ்' உணவகத்தின் ஆதரவில் சுவையான மதிய உணவையும் உண்டு மகிழ்ந்தனர்.

பொங்கல் திருநாளை வித்தியாசமாகக் கொண்டாட நினைத்த பல்கலைக்கழக மாணவர்கள், வீடு வீடாகச் சென்று பிள்ளைகளுக்கு அழைப்பு விடுத்து கொண்டாட்டத்தில் பங்கேற்கச் செய்தது வீண் போகவில்லை என்ற திளைப்பில் அடுத்த முறையும் இதுபோன்ற சுவாரசியமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய விழைகின்றனர்.



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'பொங்கல் கலாட்டா' நிகழ்ச்சியில் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்காக பொங்கல் பானைகளுக்கு வண்ணம் தீட்டுதல், வண்ணப் பொடிகளைக் கொண்டு ரங்கோலி கோலமிடுதல் (கீழ்ப்படம்) போன்ற அங்கங்கள் இடம்பெற்றன. **படம்: சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை**



Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.